# தேசிய கல்விக் கொள்கை
# தீர்மானித்தல் மற்றும் செயற்படுத்தல்

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

**பணிக் கையளிப்பு இலக்கம் :- ஈடீயூ/பீ/என்ஈசீ/பீஈஆர்/2019/1**

## உள்ளடக்கம்

--------------------


| தொடர் இல | விபரம் | பக்க இலக்கம் |
| --- | --- | --- |
| 1. | நிறைவேற்றுப் பொழிப்புரை | 3-6 |
| 2. | பின்புலம | 6 |
| 2.1 | அறிமுகம் | 6 |
| 2.1.1 | தேசிய கல்வி ஆணைக்குழு | 6-7 |
| 2.1.2 | தேசிய கல்விக் கொள்கையைக் கட்டியெழுப்புவதற்குக் காணப்படும் நிறுவகக் கட்டமைப்பு | 8 |
| 2.1.3 | சட்டரீதியான ஏற்பாடுகள் | 8-9 |
| 2.1.4 | நிதி ஏற்பாடுகள் | 9 |
| 2.1.5 | இணைந்த நிறுவனங்கள் | 9 |
| 2.1.6 | தேசிய கல்விக் கொள்கை | 10-11 |
| 2.1.7 | தேசிய கல்விக் கொள்கையைத் தீர்மானித்தல் மற்றம் செயற்படுத்தல் நடைமுறைகள் | 12 |
| 2.1.8 | தேசிய கல்விக் கொள்கையைத் தீர்மானித்தல் மற்றும் செயற்படுத்தல் படிமுறைகள் | 12 |
| 2.1.9 | தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அண்மைக் காலங்களில் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருந்த கொள்கைப் பிரசுரங்கைக் கட்டியெழுப்புதல் மற்றும் செயற்படுத்தலின் நடைமுறைகள் | 13-16 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரங்கள் | 16 |
| 2.3 | கணக்காய்விற்கான அடிப்படை | 16-18 |
| 2.4 | கணக்காய்வுப் பிரவேசம் | 18 |
| 2.5 | கணக்காய்வின் நோக்கம் | 18 |
| 2.6 | கணக்காய்வு மூலப்பிரமாணம் | 18 |
| 2.7 | கணக்காய்வு விடயப்பரப்பு | 19 |
| 2.8 | கணக்காய்வு விடயப்பரப்பினை வரையறுத்தல் | 19 |
| 3 | அவதானிப்புக்கள் | 19-24 |
| 4 | பரிந்துரைகள் | 24-25 |

## 01 நிறைவேற்றுப் பொழிப்புரை

---------------------------------------------------

கல்வியானது தனி நபரொருவருக்குள் அறிவு, திறன்கள், ஆற்றல்கள் மற்றும் எண்ணங்களை வளர்க்கும் செயன்முறையாகும். கற்றல், கற்பித்தல், மதிப்பிடல், அனுபவித்தல், பயிற்சி போன்ற பரந்த துறையுடன் தொடர்புடையதாகும். அதாவது கல்வியானது தனிநபர் திறன்களை உற்சாகப்படுத்தி பூரணமான மனிதனை உருவாக்குவதற்கான மனித அபிவிருத்தி செயற்பாடு போன்றே சமூகத்தை அபிவிருத்தி செய்தலை முன்னிருத்தும் சமூக அபிவிருத்திச் செயற்பாடாகும். இலங்கையில் கல்வியானது 2000 வருடங்கள் பழமை வாய்ந்த பெருமை மிக்க வரலாற்றுக்கான உரிமை கோரக் கூடியதுடன் இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் கல்வி அடிப்படை உரிமையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பிள்ளைகள் வாழும் சமூகம் அவர்களுக்குத் திருப்தியான வாழ்க்கையை வாழ்வதற்கும், வயது வந்தோருடன் இணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபட ஆயத்தமாவதற்கும், இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக நிபுணத்துவம் வாய்ந்த தொழிற்படையை உருவாக்கிக் கொள்வதற்கும், உயர் கல்வியை விரிவுபடுத்துவதற்கான கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் அல்லது வடிவமைத்தல், உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் அதற்கொத்த பிரவேசங்கள் போக்குகள் மற்றும் தேவைப்பாடுகளுடன் ஒத்து செல்வதற்கும், அவ்வாறான வேறுபாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு சமூக பின்புலத்தினைக் கருத்திற்கொண்டு உயர் கல்வியை விரிவுபடுத்துவதற்கும், தேசிய அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வதோடு தேசிய கல்விச் கொள்கையினைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அபிவிருத்தியடைந்த அனைத்து நாடுகளும் அபிவிருத்தியை அடையும் போது முதலில் விவசாய ரீதியில் உயர் சமூக பொருளாதார அபிவிருத்தியை கைப்பற்றிக்கொள்வது அடிப்படை இலட்சிணையாகும். இதனால் காலத்திற்குக் காலம் விசேடமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை அறிந்து கொண்டு அந்தத் துறைகளின் அபிவிருத்திக்கு கல்விக் கொள்கையினைத் தயாரித்தல் அத்தியாவசியமாகும்.

1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின்படி தேசிய கல்விக் கொள்கையை கட்டியெழுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன், அதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. இதற்காக திரண்ட நிதியத்திற்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் கீழும் நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த செயலாற்றல் கணக்காய்வின் போது கொள்கை தயாரித்தல் மற்றும் அவற்றை அங்கீகரித்தல் போன்றே செயற்படுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றும் நிறுவனங்களின் செயல்களையும் கருத்திற் கொள்ளப்பட்டது. அங்கு நாட்டிற்கு உற்பத்தித் திறனுள்ள தேசிய கல்விக் கொள்கையொன்று கட்டியெழுக்கப்பட்டுள்ளதா மற்றும் அது இயங்கும் நிலையில் காணப்படுகின்றதா என்பவையுடன் அது போன்ற கொள்கையினைத் கட்டியெழுப்புதல் மற்றும் செயற்படுத்தலுக்காகக் காணப்படும் தேசிய மட்டத்திலான கண்காணிப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு போதுமானதா என்பதையும் பரீட்சித்தல் அடிப்படை நோக்கமாகும்.

அவ்வாறே வருடாந்தம் பல்கலைக்கழக கல்வியில் ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கையினை நோக்காகக் கொண்டு ஒழுங்கான கல்வியினை பெற்றுக்கொடுத்தல், கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் கருத்திற் கொள்ளக்கூடியளவு சதவீதமானோர் கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சைக்கு தகைமை பெறாமையும், அந்த தகைமைகளைப் பெறும் மாணவர்களில் குறைந்தளவு சதவீதமானரே பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெறுதலும், பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெறும் மாணவர்களில் குறைந்த சதவீதமானோரே பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவதும். அதில் ஆண் மாணவர்களின் சதவீதம் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளமையும், தகைமைகளற்ற சாதரண தரம் மற்றும் உயர்தரம் சித்திபெறாதோர் வருடாந்தம் தொழிற்படையில் ஒன்றினைவதும் அவர்களுக்குச் சமூகத்திற்குப் பொருத்தமான திறமைகள் இல்லாதிருப்பதனால் தொழில் பற்றாக்குறை காணப்படுவதாலும் இந்தக் மாணவர்களுக்கு தொழில் மற்றும் முறைசார கல்வியினைப் பெற்றுக்கொடுத்தல் கல்விக்கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தற்போது பல்வேறு கல்வி நிறுவகங்களிடம் இதற்காக தேவையான அதிகாரம் உள்ள போதும் இவை பொருத்தமான கல்விக்கொள்கையினைக் கொண்டிராததுடன் கல்வித் துறையில் பல்வேறுபட்ட கொள்கை ரீதியிலான சிக்கல்கள் எழும்பியுள்ளன.

பல்வேறுபட்ட திறன்களைக் கொண்ட பிள்ளைகளுக்கு கணித பாடத்தில் சித்தி பெற வேண்டிய தேவைப்பாடு காரணமாக தமக்கு விருப்பமான துறையில் முன்னேறி செல்வதற்கு முடியாதிருத்தல், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வித் துறைகளில் காணப்படு பாடநெறிகளில் பற்றுபற்றுவதற்கு முடியுமான அனைத்து மாணவர்களையும் பங்குபற்றச் செய்யவதற்கு அந்த நிறுவனம் தவறியுள்ளமை, சுதந்திர கல்விக் கொள்கை, அனைவருக்கும் கல்வியினை வழங்கும் கொள்கை கடந்த காலங்களிலிருந்து நாட்டில் செயற்படுத்தப்பட்டு வருகின்றதெனினும் பிள்ளைகளுக்கு கல்வியினை பெற்றுக்கொள்வதற்கு பெற்றோருக்கு தமது நிதியில் பெரும் பங்கினை செலவிட வேண்டியுள்ளமை மற்றும் பாடசாலை பாடநெறிகள் சிக்கலாக உள்ளமையால்

பிள்ளைகள், ஆசிரியர் மற்றும் பெற்றோர் முகங்கொடுக்க வேண்டியுள்ள மன உலைச்ச் போன்ற துறையினுள் காணப்படும் சிக்கல்கள் காரணமாக அந்த சிக்கல்களுக்கு உரிய தேசிய கல்விக் கொள்கையின் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக தேசிய கல்விக் கொள்கையை கட்டியெழுப்புவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் நிறுவனப் பின்புலம் மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு பற்றி ஆழமாக ஆராய்தல் இந்தக் கணக்காய்வின் நோக்கமாகும்.

இந்தக் கணக்காய்வுப் பரீட்சிப்பில் தேசிய கல்விக் கொள்கைத் திரட்டு தொடர்பில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயற்பாட்டினை பரீட்சித்தல், உரிய ஏனைய ஆவணங்களை மீளாய்வு மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் ஆராய்ச்சி அறிக்கை பரீட்சிப்பு மற்றும் சார்புடைய கருத்துக்களைக் கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

ஆணைக்குழுவில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் காணப்படாமை மற்றும் சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகளில் 14 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை தொழில்சார் மட்டத்தில் ஆராய்ச்சி செய்யக் கூடிய பதவியணியினரை இணைத்துக் கொள்ளக்கூடிய வகையில் பிரமாணக் குறிப்பொன்று தயாரிக்கப்படாமை, ஆராய்ச்சியாளர்களை வெளியில் பெற்றுக்கொள்வதினால் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளமை அவதானிக்கப்பட்டது. தேசிய கல்விக் கொள்கையைத் தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பிரமாணங்களைக் கொண்டிருக்காமையால் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருந்த பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கை தேசிய கல்விக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தும் செயற்பாடு வெற்றியளித்திருக்கவில்லை.

ஜனாதிபதி பதவியில் ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படையில் 5 ஆண்டுகளான அங்கத்துவப் பதவிக் காலம் மாற்றமடைதல் தேசிய கல்விக் கொள்கையைத் தயாரிப்பதில் முக்கிய தடையாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. இளைஞர்கள் தொடர்பில் ஆணைக்குழுவின் அறிக்கையின் 4 ஆவது அத்தியாயத்தின் படி தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தேசிய கல்விக் கொள்கை தொடர்பில் பத்தாண்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 1997 ஆம் ஆண்டின் பின்னர் தேசிய கல்வி கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அன்று தொட்டு நாட்டில் நிலவும் பல்வேறு அரசாங்க மன்றங்களுடன் தேசிய கல்விக் கொள்கையினை பிரகடணப்படுத்துவதற்கான சீர்மை முழ்கடிக்கப்பட்டிருந்தது.

ஆணைக்குழுவில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பி உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து மிகப் பொருத்தமான தொழில் தரத்திலான பதவியணியினை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தேசிய கல்விக் கொள்கையைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான தரம் மற்றும் மூலப்பிரமாணங்களைத் திரட்டி அவற்றைப் பிரகடனப்படுத்துவதற்கு ஒரே மாதிரியான படிவத்தினையும் காலச்சட்டகத்தினையும் கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறே, ஆணைக்குழுவின் பரிந்துரை அறிக்கை குறித்த துறையின் அனைத்துத் தரப்பினரையும் மீண்டும் மீளாய்வுக்குட்படுத்தி பிரகடனப்படுத்தக் கூடிய வகையில் தயாரித்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதற்கான அரச பொறிமுறையொன்று மற்றும் சட்டரீதியான ஏற்பாடுகளை செய்து கொள்ளல் வேண்டும். அதன் மூலம் மாற்றமடையாத தேசிய கல்விக் கொள்கையினை நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

## 2. பின்புலம்

------------

### 2.1 அறிமுகம்

---------------

#### 2.1.1 தேசிய கல்வி ஆணைக்குழு

---------------------------------------------

இளைஞர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் 4 ஆவது பிரிவின்படி கல்விக் கொள்கை தொடர்பாக பொதுவான உடன்பாட்டினைப் பெறும் நோக்கில் ‘‘கல்விக் கொள்கை தொடர்பான தேசிய ஆணைக்குழு’’ ஒன்றினை அமைப்பதற்கான முக்கிய தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது. ‘‘அவ்வாறான ஆணைக்குழுவொன்றின் மூலம் உடனடியாகப் பத்தாண்டுத் திட்டமொன்றைத் தயாரிக்கும் செயற்பாட்டினை ஆரம்பிக்க வேண்டியிருந்ததுடன், 1991 ஆம் ஆண்டினுள் அந்தத் திட்டத்தினைச் செயற்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும்’’ எனும் இளைஞர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காரணியை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் காலத்திற்கு காலம் ஏற்படும் அரசியல் மாற்றங்களினால் உருவாகும் தாக்கங்களிலிருந்து விடுபட்ட கல்வி முறையொன்றிற்கு நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட்ட கொள்கையொன்றினைத் தயாரிப்பதற்கான முக்கியத்துவத்தினை அறிந்து கொண்டு அதற்காக 1991 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கல்வி ஆணைக்குழுவின் சட்டத்தின் கீழ் தேசிய கல்வி ஆணைக்குழு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 2(1) ஆவது பிரிவு மற்றும் 2(3) ஆவது பிரிவின்படி தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கும் பரிந்துரைகள் உள்ளிட்ட அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கல்வியில் அனைத்துப் பிரிவுகள் தொடர்பிலும் பொறுப்புக் கூறக்கூடிய அனைத்து அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்களினால் இணக்கப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டிய தேசிய கல்விக் கொள்கையினை ஜனாதிபதியினால் காலத்திற்குக் காலம் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

ஆணைக்குழுச் சட்டத்தின் 4(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அமைப்பின் நிரந்தர அங்கத்தவர் இருவரும் மற்றும் கல்வி, நிர்வாகம், முகாமைத்துவம் போன்ற துறைகளில் திறமையுள்ள நபர்கள் 10 பேர்களும் உள்ளடங்கலாக ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் 13 அங்கத்தவர்களும், சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் உப தலைவர்கள் இருவரும் அடங்குவர் (இணைப்பு இலக்கம் 01). தேசிய கல்வி ஆணைக்குழுவின் பதவியணியினர் உள்ளடக்கம் (இணைப்பு 02) காட்டப்பட்டுள்ளது. ரூபா 760,500 மாதாந்த வாடகை அடிப்படையில் நுகேகொடை, நாவலை வீதியில் இலக்கம் 126 ஆம் தலத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு காணப்படும் இடவசதி மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் தேவைக்கு பொருத்தமான இடமொன்று தேடப்பட்டு வருகின்றது. அவ்வப்போது தேசிய கல்வி ஆணைக்குழு கல்வி அமைச்சின் கீழ் நியமிக்கப்படல் மற்றும் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிப்பதிலுள்ள தாமதம் காரணமாக ஆணைக்குழு மற்றும் நிலையான குழு நீண்ட காலமாக செயற்படாது இருந்தமையால் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் அவ்வப்போது செயலற்று காணப்பட்டது.

### 2.1.2 தேசிய கல்விக் கொள்கையைக் கட்டியெழுப்புவதற்குக் காணப்படும் நிறுவனக் கட்டமைப்பு

தேசிய கல்வி ஆணைக்குழு

↓

காணப்படுகின்ற தேசிய கல்விக் கொள்கையினை மீளாய்வு செய்தல், பிரேரணைகளைத் தயாரித்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளல்

↓

ஜனாதிபதி

↓

தேசிய கல்விக் கொள்கையினை காலத்திற்குக் காலம் பிரகடணப்படுத்தல் கல்வியுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல்

↓

கல்வி அமைச்சு, தொழிற்திறன் அபிவிருத்தி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள், மாகாண கல்வி அமைச்சு, தொழிற் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட நிறுவனங்கள்

↓

தற்போதுள்ள கல்விக் கொள்கையில் குறித்த திருத்தங்களை மேற்கொண்டு தேசிய கல்விக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

### 2.1.3 சட்டரீதியான ஏற்பாடுகள்

(அ) 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 2(1), 2(3), 8(1) (அ), (ஆ), (இ), 8(2), 8(2)(அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ) மற்றும் 9 ஆம் பிரிவுகளினூடாக தேசிய கல்விக் கொள்கையைக் கட்டியெழுப்புவது தொடர்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்கள் இணைப்பு இலக்கம் 03 இல் காட்டப்பட்டுள்ளன.

(ஆ) தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 10(1)(ஆ), (உ), (ஏ), (ஐ) மற்றும் (ஒ) போன்ற பிரிவுகளினூடாக ஆணைக்குழுவின் அதிகாரங்கள் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்கள் இணைப்பு இலக்கம் 04 இல் தரப்பட்டுள்ளன.

### 2.1.4 நிதி ஏற்பாடுகள்

2018 ஆம் ஆண்டிற்கான தலைப்பு இலக்கம் 12 இன் கீழ் ரூபா 49 மில்லியன் திரண்ட நிதியத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 6 மில்லியன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவாக கொள்கைப் பிரகடனப்படுத்தல் தயாரிக்கும் செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. திரண்ட நிதியத்திற்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிச் செயற்திட்டத்தின் கீழும் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் இணைப்பு 05 இல் தரப்பட்டுள்ளன.

### 2.1.5 இணைந்த நிறுவனங்கள்

தேசிய கல்விக் கொள்கைத் தயாரிக்கும் நடைமுறை போன்றே கொள்கையினை நடைமுறைப்படுத்தும் படிமுறையிலும் தொடர்புபட்ட நிறுவனங்கள்

| | **நிறுவனங்கள்** | **கடமைப் பொறுப்புகள் சுருக்கமாக** |
|---|---|---|
| **(அ)** | ஜனாதிபதி செயலகம் | தேசிய கல்வி கொள்கையினைப் பிரகடணப்படுத்தல் |
| **(ஆ)** | கல்வி அமைச்சு | |
| **(இ)** | உயர் கல்வி அமைச்சு | |
| **(ஈ)** | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு | |
| **(உ)** | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் கொள்கைகளைத் தயாரித்தல் செயற்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தல். |
| **(ஊ)** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | |
| **(எ)** | தேசிய கல்வி நிறுவனம் | |
| **(ஏ)** | பரீட்சைகள் திணைக்களம் | |
| **(ஐ)** | ஏனைய தொடர்புபட்ட நிறுவனங்கள் | |

### 2.1.6 தேசிய கல்விக் கொள்கை

--------------------------------------------

1990 மார்ச் - இளைஞர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தினால் தேசிய கல்விக் கொள்கையினைக் கட்டியெழுப்புவதற்குத் தேசிய கல்வி ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் கல்வியின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் பொறுப்புக் கூற வேண்டிய அனைத்து அதிகாரசபைகள் மற்றும் நிறுவனத்தினால் இணக்கப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டிய தேசிய கல்விக் கொள்கையினை ஜனாதிபதியினால் காலத்திற்குக் காலம் பிரகடனப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

1990 மார்ச் - இளைஞர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தினூடாக இனங்காணப்பட்ட பரிந்துரைகளின்படி கல்விக் கொள்கையானது:

(அ) தொழில் உணர்திறன் மிக்கதாக வேண்டியதுடன்,

(ஆ) பிள்ளைகளுக்குத் தொழிற்திறன் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) இதன் மூலம் நாட்டு நிதியை உயர்ந்த தரத்தில் பயன்படுத்துவதற்கான வழிவகைகள் உருவாக்கப்படல் வேண்டும்

1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய கல்விக் கொள்கைக்கு கீழே தரப்பட்டுள்ள காரணிகள் உள்ளடங்கும்.

(அ) கல்வியின் குறிக்கோள் மற்றும் இலக்குகள்:

(ஆ) முன்பள்ளி, ஆரம்பநிலை, இடைநிலை, மூன்றாம் நிலை, உயர், முறைசாரா, முறையற்ற, முதியோர், விசேட, தொழில்சார் மற்றும் சமயம் போன்ற கல்வி முறையின் அமைப்பு;

(இ) மாணவர்களை அனுமதித்தல் மற்றும் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைகள் மற்றும் மூலப்பிரமாணங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் தாபித்தல் மற்றும் அவற்றின் பரம்பல்.

(ஈ) கற்பித்தல் மொழி மூலம், விடய நெறி பல்வகைப்படுத்தல்,பாட நூல், மற்றும் கற்றல் உபகரணங்கள், சமய அறிவு, பின்பற்றல் மற்றும் பரிச்சயமான இடம், மதிப்பீடு செய்தல் மற்றும் மதிப்பாய்வு, பரீட்சை முறைகள், சான்றிதழ்கள், அறிவாற்றல் ஆவணங்கள் மற்றும் கல்வி வழங்கல் மற்றும் தகைமைகளை பெற்றுக் கொள்ளல், ஆசிரியர்கள், உதவி பெறும் கல்வி பதவியணியினர், கண்காணிப்பு மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட கல்விச் சேவைப் பதவியணியினை இணைத்துக் கொள்ளல், அமைத்தல் அவர்களின் ஒழுக்கத்தை நிர்வகித்தல் மற்றும் தொழில் அபிவிருத்தி;

(உ) சமூக பங்களிப்பினைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட கல்விக்கான வளங்கள்; மற்றும்

(ஊ) பகலுணவு, சுகாதார மற்றும் பற்சேவை, உடற் கல்வி மற்றும் விளையாட்டு உள்ளிட்ட கற்றல் தொடர்பான உதவிச் சேவைகள்.

அவ்வாறே சர்வதேச ரீதியில் கால அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி இலக்கினையும் கருத்திற் கொண்டு கல்விக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**1939** - கல்வி விஞ்ஞாபனம் இலங்கையின் தேசிய கல்வி தொடர்பான அடிப்படைத் தொடக்கமாகக் காணப்படும் கொள்கையானதுடன், அந்த பிரகடனம் இது வரையிலுமே செல்வாக்குச் செலுத்தி வருவதோடு விசேட குறிக்கோள்கைகளை எட்டும் நோக்கில் விசேடமான கட்டளைச் சட்டத்தின் கொள்கைகளாக இணைக்கப்பட்டுள்ளன.

**1943** - கௌரவ சீ. டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அவர்களால் முன்வைக்கப்பட்ட கல்வி பற்றியதான அறிக்கையின்படி சகல பிள்ளைகளுக்கும் கல்விக்கான உரிமையைப் பாதுகாத்தல் அரசின் கொள்கையாக உள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அவர்களின் சேவைக் காலத்தினுள் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள கொள்கை அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.1.7 தேசிய கல்வி கொள்கையினைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்ப்படுத்தும் நடைமுறை**

---

ஆணைக்குழுவினால் கொள்கை அறிக்கை தயாரிக்கையில் பின்வரும் பல்வேறு துறைகளை அறிந்து அதன் கீழ் கொள்கை அறிக்கை சமர்ப்பித்தல் இடம்பெற்றிருந்தது.

(அ) சாதாரணக் கல்வி


(ஆ) கைத்தொழில் மற்றம் மூன்றாம் நிலை கல்வி

(இ) உயர் கல்வி

இதற்காக ஆணைக்குழுவால் வெவ்வேறாக மூன்று குழுக்கள் தாபிக்கப்பட்டிருந்தன.

**2.1.8 தேசிய கல்விக் கொள்கையினைத் தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலின் படிமுறைகள்**

---



**2.1.9 தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அண்மைக் காலங்களில் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொள்கை அறிக்கையினைக் கட்டியெழுப்புதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகள்**

---

தேசிய கல்வி கொள்கையினைத் தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயற்பாடு தொடர்பாகக் கவனத்திற் கொள்கையில் கடந்த காலத்தில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொள்கைக்கான பரிந்துரை அறிக்கைகள் பல தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

**(அ) 1997 – பொதுவான கல்வியின் மீளமைப்பு**

---

(i) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சரின் தலைமைத்துவத்தில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி செயலாற்றல் படையணியால் தேசிய கல்வி ஆணைக்குழுவுடன் இணைந்தும் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 1992 இல் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட அறிக்கை 1997 – தேசிய கல்விக் கொள்கையென ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த அறிக்கை 1999 தொடக்கம் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) இங்கு முதலாம் தரம் தொடக்கம் பதின் மூன்றாம் தரம் வரையிலான காலப்பகுதியினுள் முறையான பாடசாலைக் கல்வி மட்டுமன்றி முன் குழந்தைப் பருவக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, முதியோர் கல்வி, இடையறாக் கல்வி மற்றும் விசேட கல்வி போன்ற சகல துறைகள் தொடர்பிலும் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அந்தக் மீளமைப்புகள் தற்காலம் வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(iii) ஜனாதிபதி செயலாற்றல் படையணிக்கு கல்வி கொள்கையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பான தரப்பினரும் (இணைப்பு 07) இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த செயலை நிறைவேற்றுகையில் 12 தொழில்நுட்பக் குழுக்களையும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. (இணைப்பு 08) குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முன் மொழிவுகளை சேகரித்து நிறைவேற்றுப் பொழிப்பொன்று

தயாரித்திருந்ததுடன் அந்த அறிக்கை சார்ந்த கல்வித் துறையில் ஒவ்வொரு சட்டத்திலும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும், அதற்கான பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டிய நிறுவனங்களும் செயற்படுத்தல் கால அட்டவணையும் பிரேரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) 2016 – பொதுவான கல்விக் கொள்கை முன்மொழிவுகள்**

---

(i) ஒட்டுமொத்த பொதுவான கல்வியினையும் உள்ளடக்கி 10 துறைகள் தொடர்பில் ஆராய்ச்சியினை மேற்கொள்ள ஆராய்ச்சிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் அறிக்கை நிபுணத்துவ சபையினரால் மீளாய்வு செய்யப்பட்டு ஆராய்ச்சிக் குழுக்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் பொறுப்பு மிக்க குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு கொள்கை யோசனைகளுக்கு உரு கொடுக்கப்பட்டிருந்தது.

(ii) கொள்கை வெளியீடு 2017 ஆம் ஆண்டில் ஜனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் தொடர்புடைய தரப்பினரை இணைத்தக் கொண்டு கலந்துரையாட திட்டமிடுவதற்குக் கல்வி அமைச்சிற்கு 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் இது தொடர்பாகப் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம் பெற்ற வண்ணம் இருந்தது.

**(இ) 2018 – கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி தொடர்பான தேசிய கொள்கை**

---

(i) கடந்த தசாப்தத்தில் உள்நாடு மற்றும் சர்வதேசத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகவும் மற்றும் தொழில் உலகின் தேவைப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டு தற்போது காணப்படும் கொள்கையினை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய கொள்கை அறிக்கையினை உருவாக்குவதன் அவசியத்தை அறிந்து கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான அறிக்கையை குறித்த தரப்பினருடன் செயலமர்வொன்றினை நடாத்திக் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் 09 ஆர்வலர் குழுக்களையும் இணைந்து அறிந்து கொள்ளப்பட்ட துறைகளின் கீழ் ஆய்வொன்றை மேற்கொண்டு வரைபாக்கப்பட்டிருந்தது.

(ii) ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2019 ஓகஸ்ட் 28 ஆம் திகதி அறிக்கைக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அங்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எட்டுவதற்காகக் கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி தொடர்பான தேசிய கொள்கையை செயற்படுத்துவது தொடர்பில் குறித்த பிரதிநித்துவப்படுத்தும் நிறுவனங்களுக்குரிய செயற்பாடுகள் மற்றும் அதன் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் காலக் கட்டமைப்பு குறிப்பிடப்பட்ட செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட செயல் திட்டத்தினைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது.

(iii) விசேட மத்தியஸ்த தேவை, எதிர்பாராத கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி பயிற்சிக்கான கேள்வி மற்றும் சவால்களை நிறைவேற்றுவதற்குப் பொறிமுறையொன்றை வழங்குவதற்கு இந்தக் கொள்கையினூடாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

(iv) தேசிய மட்டத்தினை கண்காணிப்பு மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**(ஈ) 2019 – முன்பள்ளிக் கல்வி தொடர்பான தேசிய கொள்கை**

---

(i) 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முன்பள்ளிக் கல்வி தொடர்பான தேசிய கொள்கையில், நிர்வாகம் செய்ய வேண்டிய தரப்பு மத்திய அரசின் சிறுவர் நடவடிக்கை தொடர்பான அமைச்சாகவும் முன் பராய அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய இணைப்புக் குழுவானது தேசிய மட்டத்தில் கண்காணிப்புச் செய்ய வேண்டும் எனவும் இனங்காணப்பட்டிருந்தது.

(ii) இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்ப குறைவுப் பருவக் கல்வி தொடர்பான ஆலோசனைக் குழுவை தாபிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

(iii) முன்பள்ளி தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தல் நிர்வகித்தலுக்கு மத்திய அரசின் சிறுவர் அலுவல்கள் அமைச்சு பிரேரிக்கப்பட்டிருந்தது.

(iv) மத்திய அரசின் சிறுவர் அலுவல்கள் அமைச்சிற்கு ஆலோசனை வழங்கல், வழிகாட்டுதல் மற்றும் உதவி வழங்கல் ஆரம்ப முன் பருவ கல்வி தொடர்பான ஆலோசனைக் குழுவின் கடமைப் பொறுப்பாக அறியப்பட்டிருந்தது.

(v) ஆராய்ச்சி துறை குத்தான நேரடிக் கலந்துரையாடல் மற்றும் நிபுணர்கள் ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி தொழிலில் உள்ளோர், அரச நிர்வாகிகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பிரதிநித்துவ நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களைக் கொண்ட துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்கள் போன்றவற்றின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தத் தேசிய கொள்கை தேசிய கல்வி ஆணைக்குழுவினால் வரைபாக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 09)

(vi) இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

--------------------------------------------------------

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உருப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் என்னுடைய தலைமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 கணக்காய்வின் அடிப்படை

------------------------------------------------

(அ) கல்வியின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் பொறுப்புக் கூற வேண்டிய அனைத்து அதிகாரசபைகளும் மற்றும் நிறுவனங்களும் அவர்களின் அதிகாரத்தின் அடிப்படையில் பல்வேறு கொள்கைகளைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்வேறு அரசியல் ஆதாரங்கள் ஊடாக அந்த கொள்கைகள் மாற்றமடைவதைத் தவிர்த்துக் கொண்டு தரமான கல்விக் கொள்கையொன்றை ஒன்றிணைந்து நடாத்திச் செல்லல் போன்ற நோக்கங்களை முன்கூட்டியே இந்த நிறுவனம் ஆரம்பித்திருந்த போதும் கல்வித் துறையில்

பல்வேறு அதிகாரிகளும் மற்றும் நிறுவனங்களினால் அவர்களின் அதிகாரத்தின் அடிப்படையில் பல்வேறு கொள்கைகளைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்வேறு ஆரசியல் ஆதாரங்கள் ஊடாக இக் கொள்கைகள் மாற்றமடைவதைக் காணமுடிகிறது

(ஆ) நிலையான தீர்வொன்று இல்லாத பின்வரும் சிக்கல்கள் நீண்ட காலமாக கல்வித் துறையினுள் காணக் கிடைத்தல்.

(i) பாட விதானத்தின் உள்ளடக்கத்தின் அதிகரிப்பினால் தீர்மானிக்கப்பட்ட பாடசாலைக் காலத்தினுள் நிறைவு செய்ய முடியாமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் மனவேதனைக்கு உள்ளாவதும், பாட விதானத்தைப் பூரணப்படுத்துவதற்கு மேலதிக வகுப்புகளை நாடுவதும், பிள்ளைகளுக்கு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குள்ள நேரம் மட்டுப்படுத்தப்படுவதும், மேலதிக வகுப்புக்களுக்காகப் பெற்றோரின் பணம் மற்றும் நேரம் பாரியளவில் செலவிட வேண்டியுள்ளதும்.

(ii) கல்வி, மூன்றாம் நிலை மற்றும் உயர் கல்வித் துறைகளுள் பாடநெறிகளைத் திட்டமிடுகையில் தொழிற் சந்தையின் கேள்விகளுக்குப் பொருந்தும் வகையில் பாடநெறிகளைத் திட்டமிடாமை மற்றும் அவற்றை காலத்திற்குக் காலம் மீளாய்விற்கு உட்படுத்தாமை

(iii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விக்காக காணப்படுத் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பாடநெறிகள் பலவற்றுக்கு பங்குபற்றுவதற்குப் கல்விப் பொதுத்தராதரப் (சாதரணதர தரம்) சித்தி பெற்ற மற்றும் கணித பாடம் சித்தியடைதலை அடிப்படை தகைமையாகக் கருதுவதால் பல்வேறு திறமைகள் கொண்ட பிள்ளைகளுக்கு கணிதத்தில் சித்திபெறாமையால் தமக்குப் பிடித்தமான துறையில் முன்னோக்கிச் செல்வதற்கு முடியாதுள்ளமை.

(iv) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வித் துறையினுள் காணப்படும் பாட நெறிகளில் பங்குபற்றக் கூடிய அனைத்து மாணவர்களையும் இணைத்துக் கொள்வதற்கு அந்த நிறுவனம் தவறியுள்ளமை.

(v) உயர் கல்வியில் ஈடுபடும் சிறு தொகையினரை நோக்காகக் கொண்டு பொதுவான கல்வி காணப்படுதல்.

(vi) நல்ல தரத்துடனான முன்பள்ளி கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு சிறந்த திறமைகள் மற்றும் பயிற்சியும் உள்ள ஆசிரியர்கள் துறையினுள் இல்லாதிருத்தல்.

(இ) மேற்கூறப்பட்ட சிக்கல்களுக்கு அவ்வப்போது ஆணைக்குழுவினால் கொள்கை யோசனைகள் முன்வைக்கப்பட்டிருப்பினும் அந்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படாமை.

## 2.4 கணக்காய்வுப் பிரவேசம்

-----------------------------------------------

பின்வரும் நுழைவுகளின் கீழ் இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(அ) 1991 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தேசிய கல்விக் கொள்கை வழங்குதல் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயற்பாட்டினைப் பரீட்சித்தல்.

(ஆ) தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தற்போது பிரகடனப்படுத்தியுள்ள கொள்கை பிரகடனங்களை பரீசீலனை செய்தல்.

(இ) சான்றோரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்

(ஈ) தலைப்பிற்குரிய விசேட ஆணைக்குழு அறிக்கையை ஆராய்தல்

## 2.5 கணக்காய்வின் நோக்கம்

--------------------------------------------

இந்தச் செயலாற்றுகைக் கணக்காய்வின் அடிப்படை நோக்கானது நாட்டிற்கு வினைத்திறனான கல்விக் கொள்கையொன்று கட்டியெழுப்பட்டுக் காணப்படுகின்றதா மற்றும் அது செயற்படும் நிலையில் காணப்படுகின்றதா எனவும் அவ்வாறான கொள்கையொன்று கட்டியெழுப்புதல் மற்றும் செயற்படுத்துவதற்கு காணப்படுகின்ற தேசிய மட்டத்திலான கண்காணிப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு போதுமானதா எனவும் பரீட்சித்தல் ஆகும்.

## 2.6 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்

---------------------------------------------------------------

(அ) தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரச்சட்டம்

(ஆ) இளைஞர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை

## 2.7 கணக்காய்வு விடயப்பரப்பு

---------------------------------------------------

நேரம் மற்றும் வளங்களின் வரையறையின் அடிப்படையில் இந்தக் கணக்காய்வு, தேசிய கொள்கைகளை தயாரித்தல் முதல் அவற்றை நடைமுறைப்படுத்தல் வரையான கட்டங்களுடன் தொடர்புபடுத் தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம், கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய சனாதிபதி செயலகத்தின் பணிகளை கருத்திற்கொண்டு இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 1997 தேசிய கல்வி கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் முதல் தற்போது வரையான கல்வி துறையின் பயணப்பாதை தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டது.

## 2.8 விடயப் பரப்பு வரையறுக்கப்படல்

---------------------------------------------------------------

தேசிய கல்வி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட 1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் கொள்கைத் திரட்டு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் காணப்படும் பழைய தரவுகள் மற்றும் தகவல்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமான போதிலும், ஜனாதிபதி செயலகத்தில் அந்தப் பழைய தரவுகள் மற்றும் தகவல்கள் இல்லாத காரணத்தால் ஜனாதிபதி செயலகத்தில் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படும் தகவல்கள் மற்றும் கல்வி ஆணைக்குழுவில் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. அவதானிப்புக்கள்

--------------------------------

(அ) ஆணைக்குழுச் சட்டத்தின் 2(1) மற்றும் 2(3) ஆம் பிரிவுகளின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் பரிந்துரைகள் உள்ளிட்ட அறிக்கைகயை அடிப்படையாகக் கொண்டு கல்வியின் அனைத்துத் துறைகள் தொடர்பிலும் பொறுப்புக் கூற வேண்டிய அனைத்து அதிகாரிகளும் மற்றும் நிறுவனங்களிடம் இணக்கப்பாட்டினைக் காட்ட வேண்டிய தேசிய கல்விக் கொள்கையை ஜனாதிபதியினால் காலத்திற்கு காலம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறாயினும் தேசிய கல்விக் கொள்ளையின் தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பிரமாணங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்காமையால் ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் பரிந்துரைகள் உள்ளிட்ட அறிக்கையை தேசிய கல்விக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தல் முறையான விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவினால் 1992 ஆம் அண்டில் தயாரிக்கப்பட்ட முதலாவது ஆணைக்குழு அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததன் பின்னர் ஜனாதிபதியால் ஜனாதிபதி செயலற்றுகைப் படையணியொன்று உருவாக்ககப்பட்டு அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தேசிய கல்வி கொள்கையை 1997 ஆம் ஆண்டில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருந்த கல்விக் கொள்கைக்கான யோசனைகள் தொடர்பாக இந்த முறையினைப் பின்பற்றியிருக்கவில்லை. இதன் காரணமாக ஆணைக்குழுவினால் 1992 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைகள் எதுவும் கொள்கை அறிக்கைகளாக வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கல்விக் கொள்கையொன்றினைத் தயாரிக்கையில் அதற்காக கல்வித்துறையில் சகல பிரிவுகளையும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என ஆலோசனையோ அல்லது வழிகாட்டலோ சட்டத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பொதுக் கல்வி தொடர்பான தேசிய கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகள், ஆணைக்குழுவின் செயலாளரினால் ஜனாதிபதியிடம் 2017 ஆம் ஆண்டு சமர்ப்பித்ததன் பின்னர் ஆணைக்குழுவின் சான்றோர் குழு, கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளடங்கலான ஏனைய முக்கிய தரப்பினர்கள் மற்றும் வளவாளர்கள் இணைத்துக் கொண்டு இந் நடவடிக்கைகளைத் துரிதமாக திட்டமிட்டு அமைச்சரவை அனுமதிக்கு மீண்டும் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மேலதிகச் செயலாளரினால் 2017 திசெம்பர் 27 ஆம் திகதி ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2003, 2016 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகள், தேசிய கல்விக் கொள்கைக்கு இணக்கப்பாட்டினைத் தெரிவிக்கும் அரச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அந்த அறிக்கையானது கொள்கையாகப் பிரகடணப்படுத்தப்பட்ட அப் பரிந்துரைகளை மேலும் வெற்றிகரமாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியமிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) Z – Score முறை நடைமுறைப்படுத்தப்பட்டமை

(ii) ஆரம்பத் தரங்களில் அடங்கியுள்ள அனைத்துக் காரணிகளையும் உள்ளடக்கிய வினாத்தாள்களுக்கும் பதிலாக ஆரம்பக் கல்வியில் தற்போது நடைமுறையிலுள்ள பாட நெறிகளை மீளமைப்பதன் கீழ் ஆரம்பக் கல்வியின் இறுதி பரீட்சைக்கு அறியப்பட்ட அத்தியாவசியமான கற்றல் தேர்ச்சிகளின் அறிவு, திறமைகள், மற்றும் விழுமியங்களைத் துறைகளினுள் இணைத்துக் கொள்ள உள்ளடங்குதல்.

(iii) ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் தொகை ரூபா 500/= உயர்த்துதல்

(iv) 5-16 வயது வரையிலான பிள்ளைகள் கட்டாயம் பாடசாலைக்கு செல்ல வேண்டிய ஒழுங்கு விதிகளை மீளமைத்தல்.

(v) கற்பித்தல் மொழி மூலம் ஆரம்ப நிலையில் தாய் மொழி, வாய் மொழி, ஆங்கிலம் மற்றும் 1,2,3,4 மற்றும் 5 ஆம் தரங்களில் முறையான கற்பித்தலை உறுதிப்படுத்தும் செயற்பாடு மற்றும் இரண்டாம் நிலையில் ஆங்கில மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது மேற்கொள்ளப்பட முடியும் போன்றவற்றை தேசிய கல்வி நிறுவனம் பாடநெறிகளைத் கவனத்திற் கொண்டிருந்தமை.

(உ) 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி தொடர்பான கொள்கை அறிக்கையானது கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி தொடர்பான தேசியக் கொள்கையாகப் பிரகடணப்படுத்தப்பட்டிருக்காததுடன் முழுத் துறையினையும் உள்ளடக்குமாக, கைத்தொழில் மற்றும் தொழிற் கல்விப் பயிற்சி அபிவிருத்தித் திட்டமொன்று இந்தக் கொள்கை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரித்து 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு செயல் திட்டத்தினுள் உள்ளடக்குவதற்கு யோசனை தெரிவித்திருப்பினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இளைஞர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தேசிய கல்வி கொள்கை தொடர்பான பத்தாண்டு திட்டமொன்றைத் தயாரிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் ஆரம்ப அறிக்கை 1992 ஆம் ஆண்டிலும் மீண்டும் பொதுவான கல்வியின் மீளமைப்பு யோசனைகள்

2003 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலும் பல்கலைக்கழக கல்வி தொடர்பாக 1996, 2000 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிலும் கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி தொடர்பில் 2009 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலும்,முன் பள்ளி கல்வி தொடர்பில் 2019 ஆம் ஆண்டிலும் கொள்கைக்கான பரிந்துரைகள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கொள்கை அறிக்கை தயாரிப்பதற்கு ஒன்றினைந்த காலச்சட்டமொன்று உருவாக்கப்பட்டிராததுடன், பத்தாண்டு கல்வித் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஜனாதிபதி செயலகத்திற்கு முன்வைக்கப்பட்ட கடந்த காலத்திற்குரிய கொள்கை ஆலோசனைகள் தொடர்பான செயற்பாடுகளை விசாரிக்க வேண்டியிருந்த போதும் பழைய தரவு மற்றும் தகவல்கள் ஜனாதிபதி செயலகத்தில் காணப்படவில்லை.

(ஏ) ஆணைக்குழுவினால் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 14,179,749 செலவிடப்பட்டு கல்விக் கொள்கை பிரகடனம்/ கொள்கைப்பிரகடன முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கல்வியுடன் தொடர்புபட்ட அனைத்து நிறுவனங்களும் இணக்கப்பாட்டினைத் தெரிவிக்க வேண்டிய தேசிய கல்விக் கொள்கையினைப் பிரகடனப்படுத்தாத காரணத்தால் அரசியல் தலையீடுகளற்ற ஒன்றினைந்த தேசிய கல்விக் கொள்கையொன்றினை நடாத்திச் செல்ல வேண்டும் எனும் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குரியாகவே உள்ளது.

(ஐ) கல்விக் கொள்கையினுள் இருக்க வேண்டியவை என ஆணைக்குழுவால் இனங்காணப்பட்ட பரிந்துரைகளான தொழிலுடன் இயைபானதன்மை, பிள்ளைகளுக்கு நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் நாட்டின் நிதியை உயர்ந்த தரத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளை உருவாக்கப்பட வேண்டியமை போன்றவற்றை நிறைவேற்றக் கூடிய வகையில் தேசிய கல்விக் கொள்யைக் கட்டியெழுப்பாமை மற்றும் 1939 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி விஞ்ஞாபனம் இதுவரையிலும் நடைமுறையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) ஆணைக்குழுச் சட்டத்தின் 10(1)(ஊ) பிரிவின் பிரகாரம் இலங்கையினுள் மற்றும் வேறு நாடுகளில் கல்வி மற்றும் அதற்குரிய துறைகள் தொடர்பான தரவுகள் கொண்ட வங்கியொன்று அமைக்கப்பட்டு நடாத்திச் செல்லல் வேண்டுமெனினும் ஆணைக்குழுவின் அச் செயற்பாடு செயலற்று உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) ஆணைக்குழுவின் கொள்கை வழங்கலுக்குரிய தரப்பினருடன் நடாத்தப்பட்ட செயலமர்வுக்குப் போதுமானளவு இட வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை மற்றும் அதற்காக வெளிவாரி கேட்போர் கூடமொன்றை பெற்றுக்கொள்கையில் மேலதிக தொகையினை செலவிட வேண்டியுள்ளது.

(ஔ) தேசிய கல்வி ஆணைக்குழுவின் சேவை பிரமாணத்தின் படி, அதன் ஊழியர்கள் கூட்டுத்தாபனம் / சபை ஊழியர்களாகக் கருதி ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்பினை வழங்குவதோடு தேசிய கல்வி ஆணைக்குழு தனியான செலவுத் தலைப்பின் கீழ் திறைசேரியில் பாதீட்டு ஏற்பாட்டினை பெற்று செயற்படும் நிறுவனமானதால் அரச அமைச்சின் வடிவிலான நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்படுகின்றது. இதன் காரணமாக தேவையான சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களினால் வேதன ஏற்றம் மற்றும் அது தொடர்பில் சில சிக்கலான நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(க) ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உத்தியோகத்தர்கள் 45 பேர் ஆனதுடன் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உள்ளபடியான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 28 ஆக உள்ளதுடன் சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இடை நிலைத் தளங்களை முறையே 06, 07 மற்றும் 03 ஆக வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ்வாறே பதவிகளை அங்கீகரிக்கும் போது ஆணைக்குழுவின் பணிப் பொறுப்புக்களுக்கு ஏற்ற வகையில் பதவிகளை அறிந்து கொள்ளாமை நிறுவனத்தில் செயலாற்றுகை குறைவடைந்து செல்வதற்கு தாக்கம் செலுத்திய காரணமொன்று என்பது அவதானிக்கப்பட்டது.

(ங) சட்டத்தின் 10(1)(ஏ) பிரிவின்படி கல்வியின் பல்வேறு துறைகளில் நிபுணத்துவங்களின் குழுவினைக் கட்டியேழுப்புவதற்கு ஏற்றவாறு உத்தியோகத்தர்களினதும் மற்றும் ஊழியர்களினதும் தொழிற்திறனை மேலும் முன்னெற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காததாலும், தொழில் தரத்திலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய பதவிணயியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு போதுமான சம்பளமொன்று பரிந்துரைக்கப்படாதனாலும், தகைமைகளைக் கொண்டுள்ள வெளி ஆராய்ச்சிகளை தெரிவு செய்ய நேர்ந்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் அவ்வாறான 08 ஆராய்ச்சிக் குழுக்களுக்காக ரூபா 3,937,500 செலவிடப்பட்டிருந்தது.

(ச) இளைஞர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் 1 ஆவது பந்தியில் தேசிய கல்விக் கொள்கைக்கான ஆணைக்குழுவின் அங்கத்தவர்களை நியமிப்பதற்குப் பரிந்துரைத்தல் முன்மொழிதல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டியதெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டு வரையிலுமே முன்மொழிவு ஆணைக்குழு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 5 ஆண்டுகளான ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலமானது ஜனாதிபதி பதவி மற்றும் அரசாங்கம் மாறியமையின் அடிப்படையில் மாற்றமடைதல் ஆணைக்குழுவின் செயலாற்றுகைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 4. பரிந்துரைகள்

--------------------------

(அ) தேசிய கல்விக் கொள்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் பிரகடனப்படுத்தலுக்குப் பொருத்தமான தரம் மற்றும் மூலப்பிரமாணங்களை வழங்கி அதற்காக ஒன்றினைந்த படிவம் மற்றும் காலச் சட்டத்தை கட்டியெழுப்புதல் வேண்டும்.

(ஆ) பரிந்துரை அறிக்கை தயாரிக்கப்பட்டதன் பின்னர் அந்தத் துறை தொடர்பான அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக் கொண்டு மீண்டும் அந்த அறிக்கையினை மீளமைப்பதற்கு உட்படுத்திப் பிரகடனப்படுத்த ஏற்ற வகையில் தயாரித்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படக்கூடிய வகையில் அரச பொறிமுறையொன்றினையும் மற்றும் சட்டபூர்வமான ஏற்பாடுகளையும் திட்டமிடல் வேண்டும்.

(இ) தேசிய கல்விக் கொள்கை தொடர்பான ஜனாதிபதி செயலத்தில் காணப்படும் தகவல்கள் ஜனாதிபதி மாறுமிடத்தில் நியமனம் பெறும் புதிய ஜனாதிபதிகள் பதவியணியினரிடம் கையளிக்க வழிமுறையொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(ஈ) ஆணைக்குழு சட்டத்தின் 10(1)(ஊ) பிரிவிற்கமைய இலங்கையினுள் மற்றும் வேறு நாடுகளிலும் கல்வி மற்றும் அதற்குரிய துறைகள் தொடர்பில் தரவு மையமொன்றினை உருவாக்கி இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லல் வேண்டும்.

(உ) செலவுகள் குறைவடையும் வகையில் மற்றும் இடவசதி போதுமான வகையில் ஆணைக்குழுவினால் பொருத்தமான இடத்தில் நிரந்தரமாக நிறுவப்பட வேண்டியதுடன் தொழில் மட்டத்திலான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஏற்ற பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்குப் போதியளவான சேவைப் பிரமாணங்களைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

(ஊ) தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளானதுடன், அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு உறுப்பினர்கள் பராளுமன்றத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி அமைச்சர்களின் விருப்பின் அடிப்படையில் சுயாதீனக் குழுவினால் நியமிக்கப்படுவதன் அவசியத்தை ஆணைக்குழு ஆரம்பிக்கையிலேயே அறிந்திருந்ததுடன் அது தொடர்பான அவதானத்தைச் செலுத்தி உறுப்பினர்களை நியமிப்பதற்குத் தேவையான சட்டபூர்வமான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(எ) ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் சுயாதீன நிறுவனமான ஆணைக்குழு 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டிருத்தல் சட்டத்திற்கு அமைவானதல்லாதன் அதைத் தவிரித்துக் கொள்வதற்குப் பொருத்தமான சட்டபூர்வமான விதிமுறைகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

| விபரம் | பின்னிணைப்பு இலக்கம் |
| --- | --- |
| ஆணைக்குழுவின் உள்ளடக்கம் | 01 |
| ஆணைக்குழுவின் பதவியணி | 02 |
| தேசியகல்விக் கொள்கையை உருவாக்குதல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகள் | 03 |
| ஆணைக்குழுவின் அதிகாரங்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் | 04 |
| நிதிஏற்பாடுகள் | 05 |
| தேசிய பாடசாலை ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு சனாதிபதிக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகள் | 06 |
| சனாதிபதி செயலாற்றல் படையணி | 07 |
| 1997 அறிக்கை – தொழில் நுட்பகுழுவின் உத்தியோகத்தர்கள் | 08 |
| முன் பள்ளி கல்வி தொடர்பான மதியுரை குழு | 09 |

**பின்னிணைப்பு 01**

**ஆணைக்குழுவின் உள்ளடக்கம்**

---------------------------------------------

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்.

(ii) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தால் நிறுவப்பட்ட தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவர்.

(iii) கல்வி மற்றும் உயர்கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்:

(iv) நிதி விடயப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்:

(v) மாகாண சபையின் விடயப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்:

(vi) கல்வி, நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய அல்லது ஒரு குறிப்பிட்ட தொழிலில் நிபுணத்துவம் பெற்ற ஐந்து நபர்களில், ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ள மற்ற பத்து உறுப்பினர்கள் சட்டத்தின் 5 வது பிரிவின் கீழ் நியமிக்கப்படும் தலைவர், துணைத் தலைவர் (கொள்கை) மற்றும் துணை தலைவர் (திட்டமிடல்) ஆணைக்குழுவின் முழு நேர கடமையாற்ற வேண்டும்.

**பின்னிணைப்பு 02**

**ஆணைக்குழுவின் பதவியணி**

**-----------------------------------------------**

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உள்ளபடியான பதவியணி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 12 | 06 | 06 |
| (ii) | இரண்டாவது மட்டம் | 11 | 06 | 05 |
| (iii) | மூன்றாவது மட்டம் | 10 | 07 | 03 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 12 | 12 | - |
| | **மொத்தம்** | **45** | **31** | **14** |

**தேசிய கல்விக் கொள்கையை கட்டியெழுப்புதல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகள்**

---

(i) அதிகாரச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கல்வியின் அனைத்து துறைகள் தொடர்பிலும் பொறுப்பு கூற வேண்டிய அனைத்து அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்களால் இணக்கம் தெரிவிக்கப்பட வேண்டிய தேசிய கல்விக் கொள்கை, ஜனாதிபதியால் காலத்திற்கு காலம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

(ii) அதிகாரச்சட்டத்தின் 2(3) பிரிவின் பிரகாரம் 3 ஆம் பிரிவின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் மற்றும் வழங்கப்படும் ஆலோசனைகள் கருத்திற்கொள்ளப்பட்டு தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும்.

(iii) 8(1)(அ) ஆம் பிரிவின் பிரகாரம் கல்விக் கொள்கை மற்றும் திட்டங்கள் அல்லது திட்டங்களை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தல் மற்றும் ஆக்கபூர்வமான கல்விக் கொள்கையொன்று தொடர்பில் ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைத்தல் உள்ளடங்களாக கல்விக் கொள்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுகின்றமையை சான்றுபடுத்துதல் மற்றும் சமூகத்தின் வேறுபடும் தேவைகளுக்கு கல்வி முறைமையின் இசைவாக்கும் எண்ணத்துடன், கல்விக் கொள்கையின் அனைத்து பிரிவுகள் தொடர்பிலும் சனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

(iv) 8(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கல்விக் கொள்கை மற்றும் திட்டம் காலத்திற்கு காலம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படல் மற்றும் மீளாய்வு செய்தலும் அவசியமான போது நெ்த கொள்கையின், திட்டத்தின் அல்லது திட்டங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் சனாதிபதிக்கு பரிந்துரைத்தல்.

(v) 8(1)(இ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அறிவுரைகளுக்காக சானதிபதியால் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படக்கூடிய கல்வியுடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சனாதிபதிக்கு அறிவுரை வழங்குதல்.

(vi) 8(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் 8(1) ஆம் உப பிரிவின் கீழ் ஆணைக்குழுயினால் பரிந்துரைகள் முன்வைக்கக்கூடிய ஏதேனும விடயம் தொடர்பில், அந்த விடயங்களின் பரம்பலுக்கு பாதகமொன்று ஏற்படாமை, ஆணைக்குழுவினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் சனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைக்க முடியும்.

(vii) 8(2)(அ) ஆம் உப பிரிவின் பிரகாரம் தொழிலகங்களில், தொழிற்சாலைகளில் மற்றும் அங்கத்துவ தேவைகளுக்கு பொருந்தும் வகையில் கல்வியை ஒழுங்கமைக்கும் தேவைப்பாடு, கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள்.

(viii) 8(2)(ஆ) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு அவர்களின் தனித் திறமைகளை மேம்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் வழங்கப்பட வேண்டிய வழிகாட்டிகள் மற்றும் மதியுரை சேவைகளின் போதுமான தன்மை.

(ix) 8(2)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினிடையே தொடர்பினை ஏற்படுத்த தேவையான வேலைத்திட்டம்,

(x) 8(2)(ஈ) ஆம் உப பிரிவின் பிரகாரம் சமூகத்தின் ஒட்டுமொத்த மனிதவள அபிவிருத்தியை நோக்காக கொண்டு கல்வி நிறுவனங்கள், வள நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படல்,

(xi) 8(2)(உ) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிராந்திய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நிலவும் இடைவெளிகளை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகள்,

(xii) 8(2)(ஊ) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சேவை ஊழியர்களின் தொழில் நிலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,

(xiii) 8(2)(எ) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளை முன்கூட்டியே விட்டுச் செல்லும் குழந்தைகளுக்கு, அவர்களது ஆற்றல்களை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு இயலுமான வகையில் அவர்களின் பயன்பாடட்டிற்காக மேற்கொள்ளக்கூடிய மாற்று வேலைத்திட்டங்கள்,

(xiv) 8(2)(ஏ) ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து சமூகங்கள் மற்றும் மதங்களின் மாணவர்களின் கலாச்சார மற்றும் மத அபிலாஷைகளை வளர்ப்பதற்கு தேவையான பாடத்திட்டத்திலான மாற்றங்கள்,

(xv) 8(2)(ஐ) ஆம் உப பிரிவின் பிரகாரம், இதுபோன்ற சில பரிந்துரைகளை செயல்படுத்துவதில் தேவையான சட்ட மாற்றங்கள்,

(xvi) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் (2) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கையின் கீழ் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ், கல்விக்குரிய ஏதேனும் விடயமொன்று அல்லது கருப்பொருளொன்று அதற்கு பொறுப்பான அமைச்சரினால்அல்லது நடைமுறையிலுள்ள அரச உத்தியோகத்தினரால் அல்லது அமுல்படுத்துவதற்குரிய அதிகாரங்களுக்கு அல்லது 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் இந்த அதிகாரச்சட்டத்தின் உள்ளடங்கப்பட்டுள்ள எந்தத விடயத்தினாலும் தாக்கம் அல்லது பாதிப்பினை ஏற்படுத்தக்கூடாது. அல்லாதுவிடின், அதனால் தாக்கமொன்று அல்லது பாதிப்பு ஏற்படும் என கருதக்கூடாது.

**பின்னிணைப்பு 04**

**ஆணைக்குழுவின் அதிகாரங்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகள்**

---

(i) அதிகாரச்சட்டத்தின் 10(1)(ஆ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பணிகளுக்கு சமனான பணிகளை நிறைவேற்றும் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்டுள்ள அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் அவற்றை பேணிச் செல்லல்.

(ii) 10(1)(உ) பிரிவின் பிரகாரம் இலங்கையினுள் மற்றும் வேறு நாடுகளில் கல்வி மற்றுமத் அதனுடன் தொடர்புடைய துறைகளின் தரவு வங்கியொன்றை தாபித்து பேணிச்செல்லல்.

(iii) 10(1)(ஏ) பிரிவின் பிரகாரம் கல்வியின் பல்வேறு துறைகளிலுள்ள நிபுணத்துவக் குழுவொன்றை உருவாக்கும் நோக்கில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு திறன்களை அபிவிருத்தி செய்வதன் தேவைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

(iv) அதிகாரச்சட்டத்தின் 10(1)(ஐ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்ற தேவைப்படும் ஏதேனும் குழுக்கள், நிபுணத்துவ குழு மற்றும் மதியுரைக் குழுவினை நியமித்தல்,

(v) அதிகாரச்சட்டத்தின் 10(1)(ஒ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தலில் மற்றும் நிறைவேற்றலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் அல்லது ஏனைய விடயங்களை நிறைவேற்றல்.

**பின்னிணைப்பு 05**

**நிதியேற்பாடுகள்**

**------------------------**

**(அ) நிதி கிடைத்தல் - திரண்ட நிதியம்**

**-------------------------------------------------------**

| கணக்காண்டு | விபரம் | மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு | தேறிய செலவினம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 2014 | 2502(முதலீடு) | 3,500,000 | 2,372,611 |
| 2015 | 2502(முதலீடு) | 4,000,000 | 198,865 |
| 2016 | 2502(முதலீடு) | 3,000,000 | 1,442,827 |
| 2017 | 2507(முதலீடு) | 2,500,000 | 1,163,378 |
| 2018 | 2507-1 (முதலீடு) | 980,000 | 586,113 |
| 2018 | 2507-2 (முதலீடு) | 5,200,000 | 4,656,645 |
| 2019 | 2507-1 (முதலீடு) | 5,000,000 | 2,322,652 |
| 2019 | 2507-2(முதலீடு) | 1,800,000 | 1,436,658 |
| மொத்தம் | | 25,980,000 | 14,179,749 |

**(ஆ) நிதி கிடைத்தல் - ஏனைய**

---------------------------------------------

| விபரம் | பெறுமதி (ரூபா) | வழங்கிய நிறுவனம் |
| --- | --- | --- |
| 2003 - இலங்கையில் பொதுக் கல்வி குறித்த தேசிய கொள்கை கட்டமைப்பிற்கான திட்டங்கள் | | மனிதவள மேம்பாடு, கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சில் உலக வங்கி நிதியளித்த ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் நிறுவனங்கள் (TETD) செயற்திட்டத்தின் மூலம். |
| 2016 - பொதுக் கல்வி தொடர்பான தேசிய கொள்கைக்கான திட்டங்கள | 5 மில்லியன் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் மூலம் உலக வங்கியின் அறிவு மையத்தின் அடிப்படையிலான பாடசாலைக் கல்வி முறைமை. |
| 2018 - தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி கொள்கையை வகுக்க | 1 மில்லியன் | மனிதவள மேம்பாடு, கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சில் உலக வங்கி நிதியளித்த ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் நிறுவனங்கள் (SSDP) செயற்திட்டத்தின் மூலம். |

**பின்னிணைப்பு 06**

| தொடர் இல. | விபரம் | ஆண்டு |
|---|---|---|
| 01. | தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை | 1992 |
| 02. | Restructuring the Teachers' Service | 1993 |
| 03. | ஆசிரியர் சேவையை மீள் கட்டமைத்தல், கல்வியை கட்டுப்படுத்தல், பொது கல்வியை கட்டாயமாக்குதல், ஆங்கிலம் கற்பதற்குள்ள சந்தர்ப்பங்களை அதிகரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல். | 1993 |
| 04. | தேசிய கல்வி குறித்த கொள்கைக்கான செயல் சார்ந்த அணுகுமுறை | 1995 |
| 05. | பல்கலைக்கழக கல்வி தொடர்பான தேசிய கொள்கை | 1996 |
| 06. | பொதுக் கல்வியில் சீர்திருத்தங்கள் | 1997 |
| 07. | பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை குறித்து ஜனாதிபதிக்கு முன்வைக்கப்படும் பரிந்துரைகள் | 2000 |
| 08. | Recommendation on National Policy for the development of Technical Education in Sri Lanka | 2002 |
| 09 | இலங்கையில் பொதுக் கல்வி குறித்த தேசிய கொள்கை கட்டமைப்பிற்கான திட்டங்கள் | 2003 |
| 10 | Recommendation in Respect of Private School and International Schools | 2003 |
| 11. | 6 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களின் மொழி மற்றும் கணித திறன் ஆய்வு பற்றிய அறிக்கை | 2006 |
| 12. | உயர் கல்வி மற்றும் கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி குறித்த தேசிய கொள்கை கட்டமைப்பு | 2009 |
| 13 | ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொதுக் கல்வி குறித்த கொள்கை திட்டங்கள் | 2007 - 2010 |
| 14. | இலங்கையில் பொதுக் கல்வி குறித்த தேசிய கொள்கைகளுக்கான திட்டங்கள் | 2016 |
| 15. | கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பற்றிய தேசிய கொள்கை | 2018 |
| 16. | முன்பள்ளி கல்வி குறித்த தேசிய கொள்கை | 2019 |

பின்னிணைப்பு 07

**சனாதிபதியின் செயலாற்றல் படையணி**

-----------------------------------------------------------

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | நிறுவனம் |
|---|---|---|
| ------ | -------------------------- | ----------- |
| 1. | கௌரவ ரிச்சர்ட் பதிரன | கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் |
| 2. | கௌரவ விஸ்வ வார்ணபால | கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் |
| 3. | பேராசிரியர் ஏ.வி.சூரவீர | கலாச்சார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் |
| 4. | செல்வி டாக்டர் தாரா டி மெல் | ஜனாதிபதி ஆலோசகர் |
| 5. | திருமதி சுனிலா மெண்டிஸ் | கௌரவ ஜனாதிபதியின் மூத்த உதவி செயலாளர் |
| 6. | திரு ஆண்ட்ரூ த சில்வா | செயலாளர், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு |
| 7. | பேராசிரியர் லக்ஷ்மண் ஜெயதிலக | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு |
| 8. | பேராசிரியர் கே.எஸ்.டி. திரு.அருள்பிரகாசம் | துணைத் தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு |
| 9. | பேராசிரியர் எஸ்.பத்மநாதன் | துணைத் தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 10. | திரு லால் செனவிரத்ன | செயலாளர், திட்டமிடல் மற்றும் இன விவகார அமைச்சர் |
| 11. | திரு அனுர குமாரசிங்க | தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |
| 12. | திரு மஹிந்த ரணவீர | சிறப்பு ஆலோசகர், கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |
| 13. | டாக்டர் திருமதி பி. அலைலீமா | மேலதிக பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் அமைச்சு |
| 14. | திரு. ஜே.பி. ஹேரத் | மேலதிக பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம் |
| 15. | திருமதி லலனி பெரேரா | மேலதிக செயலாளர், நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சு |

பின்னிணைப்பு 08

**1997இன் அறிக்கை – தொழில்நுட்பக் குழு**

**(1) தரத்தினை அதிகரித்தல்**

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | பேராசிரியர் லக்ஷ்மண் ஜெயதிலக | தலைவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | டாக்டர் திருமதி பி. அலைலீமா | மேலதிக பணிப்பாளர் நாயகம் | தேசிய திட்டமிடல் அமைச்சு |
| 3. | திரு ஜே.பி.ஹேரத் | மேலதிக பணிப்பாளர் நாயகம் | தேசிய கல்வி நிறுவனம் |
| 4. | திருமதி ஜெய்மா இஸ்மாயில் | | |
| 5. | திரு வில்பிரட் பெரேரா | மூத்த செயற்திட்ட அலுவலர் | தேசிய கல்வி நிறுவனம் |
| 6. | திரு மஹிந்த ரணவீர | சிறப்பு ஆலோசகர் | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |

**(2) ஆங்கிலத்தினை கற்பித்தல்**

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | --------------------------------- | ---------- | ----------- |
| 1. | பேராசிரியர் கே.டி. அருள்பிரகாசம் | துணைத் தலைவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | டாக்டர் தாரா டி மெல் | ஜனாதிபதி ஆலோசகர் | |
| 3. | திருமதி சந்திர அமரசேகர | | |
| 4. | திருமதி மேனிக் குணசேகர | பிரிவுத் தலைவர் | ஆங்கிலத் திணைக்களம் |
| 5. | திருமதி ஜெய்மா இஸ்மாயில் | | |
| 6. | திருமதி வய்.எஸ்.எம் யட்டவத்த | பணிப்பாளர் | ஆங்கில திணைக்களம் தேசிய கல்வி நிறுவனம் |

**(3) மதிப்பீடு செய்தல்**

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | -------------------------------- | ---------- | ----------- |
| 1. | பேராசிரியர் லக்ஷ்மண் ஜெயதிலக | தலைவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | திரு காமினி குணரத்ன | பரீட்சைகள் ஆணையர் நாயகம் | இலங்கை பரீட்சைகள் திணைக்களம் |
| 3. | திரு ஏ.ஏ. நவரத்ன | பணிப்பாளர் | மதிப்பீடு, தேசிய கல்வி நிறுவனம் |
| 4. | டாக்டர் திரு லால் பெரேரா | மூத்த விரிவுரையாளர் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. | திரு ஜி.குமாரசிங்க | அதிபர் | ராயல் கல்லூரி |

**(4) ஆசிரியர் கல்வி**

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | -------------------------- | ---------- | ----------- |
| 1. | பேராசிரியர் ஸ்வர்ணா ஜெயவீர (தலைவர்) | உறுப்பினர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | திரு. தயா ரோஹன அதுக்கோரல | | கல்வி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. | டாக்டர் பிரேமா குடலிகம | | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 4. | திரு மஹிந்த ரணவீர | சிறப்பு ஆலோசகர் | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |
| 5. | பேராசிரியர் திரு. எஸ். சந்திரசேகரன் | உதவி பேராசிரியர் | கல்வி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 6. | பேராசிரியர் ஸ்வர்ணா விஜேதுங்க | | கல்வி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |

**(5) கட்டாயக் கல்வி**

---------------------------

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | -------------------- | ---------- | ----------- |
| 1. | பேராசிரியர் ஸ்வர்ணா ஜெயவீரா | அங்கத்தவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | திருமதி ஜெயந்தி குணசேகர | பணிப்பாளர் (திட்டமிடல்) | தேசிய கல்வி நிறுவனம் |
| 3. | டாக்டர் எஸ்.டி.எல் அமர குணசேகர | பிரதி பணிப்பாளர் நாயகம் | தேசிய கல்வி நிறுவனம் |
| 4. | திரு பி.வெலிவிட்ட | பணிப்பாளர் | முறைசாரா கல்வி பிரிவு, கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |
| 5. | திருமதி ஐ. கமலா விக்ரமசிங்க | மேலதிக செயலாளர் | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |

**(6) முன் பள்ளி கல்வி**

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | திருமதி கமலா பீரிஸ் (தலைவர்) | அங்கத்தவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | திருமதி அமரா அமரசிங்க | திட்ட அலுவலர் | தேசிய கல்வி நிறுவனம் |
| 3. | பேராசிரியர் சந்திரரா குணவர்தன | உடற்கூறியல் பேராசிரியர் | மானுட மற்றும் சமூக அறிவியல் பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 4. | டாக்டர் திரு ஜி.எல்.எஸ். நானாயக்கார | பணிப்பாளர் | ஆரம்ப கல்விப் பிரிவு, தேசிய கல்வி நிறுவனம் |
| 5. | டாக்டர் சந்திரா சதரசிங்க | மூத்த திட்ட அலுவலர் | தேசிய கல்வி நிறுவனம் |
| 6. | திரு. எஸ்.பி. தோரதெனிய | | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |

**(7) பாடசாலை மீள்கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவம்**

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | பேராசிரியர் திரு. கே.டீ. அருள்பிரகாசம் | துணைத் தலைவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | கலாநிதி திருமதி பீ. அலைலீமா | மேலதிக பணிப்பாளர் நாயகம் | தேசிய திட்டமிடல் அமைச்சு |
| 3. | திருமதி. எம்.என். எதிஸ்சூரிய | அதிபர் | விசாகா கல்லூரி |
| 4. | திரு சிசிர லியனகே | மேலதிக பணிப்பாளர் நாயகம | தேசிய கல்வி நிறுவனம் |
| 5. | திரு மஹிந்த ரணவீர | சிறப்பு ஆலோசகர் | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |
| 6. | திரு. ஆர். சிவகுருநாதன் | அதிபர் | ராதநாதன் இந்து கல்லூரி |
| 7. | பேராசிரியர் திருமதி சுவர்ணா விஜேதுங்க | | கல்வி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |

**(8) மதியுரைகள் மற்றும் தொழில்சார் வழிகாட்டிகள்**

| **தொடர் இல.** | **அங்கத்தவரின் பெயர்** | **பதவி** | **நிறுவனம்** |
|---|---|---|---|
| ------- | --------------------------------- | ---------- | ----------- |
| 1. | திரு. ஜெயசேனா புத்பிட்டிய (தலைவர்) | பணிப்பாளர் | கல்வி மேலாண்மைத் துறை, தேசிய கல்வி நிறுவனம். |
| 2. | பேராசிரியர் திரு பி.டபிள்யூ. ஏபாசிங்க | தலைவர் | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |
| 3. | கலாநிதி திரு லட்சுமன் ஹெட்டியாராச்சி | | |
| 4. | பேராசிரியர் திரு ஹெட்டிகே | | சமூகவியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. | திரு. எச்.எச். குமாரப்பெரும | பிரதிப் பணிப்பாளர் | ஆங்கில முகாமைத்துவம், தேசிய கல்வி நிறுவனம் |
| 6. | கலாநிதி திரு.தியநாத் சமரசிங்ஹ | தலைவர் | தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை |

**(9) ஊடகம் மற்றும் கல்வி தொழில்நுட்பம்**

| **தொடர் இல.** | **அங்கத்தவரின் பெயர்** | **பதவி** | **நிறுவனம்** |
|---|---|---|---|
| ------- | -------------------- | ---------- | ----------- |
| 1. | பேராசிரியர் திரு பி.டபிள்யூ. ஏபாசிங்க | தலைவர் | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |
| 2. | திருமதி லக்ஷ்மி குணரத்ன | | தேசிய கல்வி நிறுவனம் |
| 3. | பேராசிரியர் சுனந்த மகேந்திர | | களனி பல்கலைக்கழகம் |
| 4. | பேராசிரியர் வி.கே.சமரநாயக்க | பணிப்பாளர் | கணினி தொழில்நுட்ப நிறுவனம் |
| 5. | கலாநிதி திரு. புத்தி வீரசிங்க | பணிப்பாளர் | கல்வி தொழில்நுட்பம் |

## (10) அறிவுறுத்தல்

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | ----------------------------- | ---------- | ----------- |
| 1. | திருமதி சுனிலா மெண்டிஸ் | மூத்த உதவி செயலாளர் | ஜனாதிபதி செயலகம் |
| 2. | கலாநிதி திருமதி தாரா டி மெல் | ஜனாதிபதி ஆலோசகர் | |
| 3. | திரு பன்துல பீரிஸ் | உதவி செயலாளர் | |
| 4. | திரு சிரில் குணபால | மேலதிக செயலாளர் | ஜனாதிபதி செயலகம் |
| 5. | திருமதி ஷான் ஜயவர்தன | | |
| 6. | திரு. அதுலா மஞ்சநாயக்க | | வெளியீடுகள் பிரிவு, தேசிய கல்வி நிறுவனம் |
| 7. | திரு கே.ஐ விக்ரமசிங்க | மேலதிக செயலாளர் | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |

## (11) பல்கலைக்கழக அனுமதி

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | -------------------- | ---------- | ----------- |
| 1. | பேராசிரியர் திரு. கே.டி. அருள்பிரகாசம் | துணைத் தலைவர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | திரு. சி. அபேகுணவர்தன | மேலதிக செயலாளர் | உயர்கல்வி அமைச்சு |
| 3. | கலாநிதி திரு காலோ பொன்சேகா | | மருத்துவ பீடம், களனி பல்கலைக்கழகம் |
| 4. | பேராசிரியர் திரு. டபிள்யூ.டி லக்ஷ்மன் | துணை வேந்தர் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. | பேராசிரியர் திரு. எஸ்.பத்மநாதன் | துணைத் தலைவர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 6. | டாக்டர் திரு. எஸ்.திலகரத்ன | தலைவர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |

(12) சட்ட உருவாக்கம்

| தொடர் இல. | அங்கத்தவரின் பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| ------- | -------------------- | ---------- | ----------- |
| 1. | திரு. ஆர்.எஸ். மெதகம (தலைவர்) | செயலாளர் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 2. | திரு பி.டபிள்யூ குணசேகர | இயக்குனர், (பி.எஸ்.டி.பி) | SIDA செயற்திட்டம், கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |
| 3. | திரு பி.வெலிவிட்ட | பணிப்பாளர் | முறையான கல்வி பிரிவு, கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு |

**பின்னிணைப்பு 09**

---------------------------

**முன் பள்ளி கல்வி தொடர்பான மதியுரைக்குழு**

----------------------------------------------------------------------

1 குழந்தைகள் விவகாரங்கள் தொடர்பான மத்திய அரசின் அமைச்சின் செயலாளர் (தலைவராக செயல்பட).

2 குழந்தைகள் செயலகத்தின் பணிப்பாளர் (செயலாளராக செயல்பட).

3 தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் அல்லது தலைவரால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரத்திலான உத்தியோகத்தர்கள்.

4 நிதி ஆணைக்குழுவின் தலைவர் அல்லது தலைவரால் நியமிக்கப்பட்ட ஒரு நிறைவேற்றுத் தரத்திலான உத்தியோகத்தர்.

5. கல்வி, நிதி, சுகாதாரம், சமூக சேவைகள் மற்றும் மாகாண சபைகளுக்கு பொறுப்பான மத்திய அரசு அமைச்சுகளின் செயலாளர்கள் அல்லது செயலாளர்களால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரத்திலான பிரதிநிதிகள்.

6 முன் பராய அபிவிருத்திக்கு/ முன்பள்ளி கல்வி தொடர்பான மாகாண ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை / பணியகம் / அலகு பணிப்பாளர்கள் அல்லது மாகாணத்தின் தலைமைச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிர்வாக நிலை பிரதிநிதிகள்.

7 தேசிய திட்டமிடல் துறையின் பணிப்பாளர் நாயகம் அல்லது பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரத்திலான பிரதிநிதியொருவர்.

8. தோட்ட மனிதவள அறக்கட்டளையின் பணிப்பாளர் நாயகம் அல்லது பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரத்திலான பிரதிநிதியொருவர்.